செ. கு. எண்: 209 நாள்: 26-11-2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 26.11.2011

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 25.11.2011 அன்று கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், விஜயமாநகரம் மதுரா, புது ஆதண்டார்கொள்ளையைச் சேர்ந்த திரு. இராமசாமி என்பவரின் மகன் கிருஷ்ணமூர்த்தி மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும், சென்னை மாவட்டம், அயனாவரம், கே.கே.நகரைச் சேர்ந்த திரு. ஸ்ரீராமுலு என்பவரின் வீட்டில் மின் கசிவு ஏற்பட்டதால் மின்சாரம் தாக்கி அவரது மனைவி திருமதி. லட்சுமி என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியையும், திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டம், வடக்குவள்ளியூர் பகுதி 2 கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்களின் மனைவி திருமதி அரிமுத்து மழையின் காரணமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்,

25.11.2011 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், செருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. சுப்ரமணியன் கடலில் மீன் பிடிக்க சென்ற போது படகு கவிழ்ந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும், அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

பல்வேறு விபத்துகளில் மரணமடைந்த இந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9